//மிக மிக அவசரம்//

தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை - 6.

ந.க. எண். 048001/எம்/இ4/2019, நாள்: 09 .12.2020

பொருள்: பள்ளிக்கல்வி - Fit India Movement - பதிவு செய்த பள்ளிகள் தவிர்த்து மீதமுள்ள அனைத்து வகைப் பள்ளிகளும் www.fitindia.gov.in இணையதளத்தில் உடனடியாக பதிவு செய்தல் – சார்ந்து.

பார்வை: 1. Government of India, Ministry of Youth Affairs & Sports, Department of Sports, Shastri Bhavan, New Delhi, F. No. K – 15017 / 7 / 2019 / FIC, Dated. 18.11.2019.

2. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை - 6, ந.க. எண். 050546/எம்/இ4/2019, நாள்: 30.01.2020.

3. இவ்வியக்கக இதே எண்ணிட்ட செயல்முறைக் கடிதம் நாள். 24.01.2020, 04.02.2020 மற்றும் 18.07.2020.

பார்வை 1–இல் காணும் கடிதத்தில் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களால் Fit India Movement சார்பாக www.fitindia.gov.in எனும் இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது. பார்வை 2–இல் காணும் பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகளின்படி, மேற்காண் இணையதளத்தில் சென்று மாநிலத்திலுள்ள அனைத்து வகைப்பள்ளிகளும் பதிவு (Registration) செய்து Fit India School Certificate (சான்றிதழ்) பெறவேண்டும் என்றும் இதன் தொடர்ச்சியாக, இதே இணையதளத்தில் Fit India சார்ந்த வினாக்களுக்கு பதிலளித்தல் மூலம் Fit India Flag, 3 Star Rating அல்லது 5 Star Rating போன்றவற்றிற்கும் விண்ணப்பிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இப்பொருள் சார்ந்து அனைத்து மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர்களும் தத்தம் மாவட்டத்திலுள்ள அனைத்து வகைப் பள்ளிகளில் பணிபுரியும் உடற்கல்வி ஆசிரியர்களையும் அவரவர் பணிபுரியும் பள்ளிகள் www.fitindia.gov.in எனும் இணையதளத்தில் அப்பள்ளிகளின் தகவல்களை உள்ளீடு செய்து Registration பணியை உடனேமுடிக்குமாறும் Fit India Flag, 3 Star Rating அல்லது 5 Star Rating போன்றவற்றிற்கும் விண்ணப்பிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்திட கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இது தொடர்பாக, அனைத்து மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர்களும் தாங்கள் பணிபுரியும் மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பள்ளிகளும் www.fitindia.gov.in எனும் இணையதளத்தில் பதிவு (Registration) செய்துள்ளதை உறுதி செய்திடவும் இப்பணியை முழுமையாக முடிக்கும் பொறுப்பும் அவர்களுக்கே உரியது என்பதை உணர்ந்து செயல்படவும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இதன் தொடர்ச்சியாக, ஒவ்வொரு மாவட்ட உடற்கல்வி ஆய்வாளரும் தங்கள் மாவட்டத்திலுள்ள அனைத்துவகைப் பள்ளிகளின் எண்ணிக்கை மற்றும் www.fitindia.gov.in எனும் இணையதளத்தில் பதிவு (Registration) செய்துள்ள பள்ளிகளின் எண்ணிக்கை ஆகியவற்றை ஒப்பீடு செய்து ஒரு தெளிவான அறிக்கையை இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தில் பூர்த்தி செய்து 15.12.2020 அன்று மாலை 5 மணிக்குள் jdnsed@nic.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் தங்கள் மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர்கள் இப்பணியை தொடர் கண்காணிப்பு செய்வதற்கு அறிவுறுத்திடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு: படிவம் – 1.

பள்ளிக்கல்வி இயக்குநர்

08/12/2020

பெறுநர்

1. அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்
2. அனைத்து மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர்கள்

# FIT INDIA REPORT

| DISTRICT WISE FIT INDIA REPORT | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| DISTRICT CODE | DISTRICT NAME | TOTAL NO.OF SCHOOLS IN THE DISTRICT | TOTAL NO.OF SCHOOLS APPLIED FOR FIT INDIA REGISTRATION | TOTAL NO.OF SCHOOLS APPLIED FOR FIT INDIA FLAG | TOTAL NO.OF SCHOOLS APPLIED FOR '3' STAR RATINGS | TOTAL NO.OF SCHOOLS APPLIED FOR '5' STAR RATINGS |
| | | | | | | |

DISTRICT CHIEF EDUCATIONAL OFFICER